# கலாதீபம்

කලෛදීපම්

KALADEEPAM

தீபம் : 01 | 01.10.2020 | சுடர் : 01


# கலாதீபம் மின்னிதழுக்கான கலாசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி



எமது கலாசாலையின் மாதாந்தச் செயற்பாடுகளை ஆவணப்படுத்தும் நோக்குடனும் விரிவுரையாளர்களின் துறைசார் அறிவை ஆசிரிய மாணவர்களிடம் பகிர்ந்து கொள்ளும் நோக்குடனும் தேசிய வாசிப்பு மாதமாகிய இம் மாதத்தில் இருந்து மாதந்தோறும் வெளிவர உள்ள கலாதீபம் என்ற மின்னிதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் கலாசாலை அதிபராய் அக மகிழ்கிறேன். கற்றலுக்கு உதவியவை எல்லாம் கலை எனப்படுகின்றன. இலங்கைப் பாடசாலைகளில் பல்வேறு பாடங்களைக் கற்பிக்கும் பணியில் உள்ள ஆசிரியர்களாகிய நீங்கள் பாடசாலைகளில் அமுலாக்கப்படும் கலைத்திட்டம் தொடர்பான போதிய விளக்கங்களை கொண்டிருத்தலுடன் மாத்திரமன்றி கலைத்திட்டம் என்ற துறை தொடர்பான விளக்கங்களையும் பெற்றிருத்தல் அவசியமாகிறது. ஏனெனில் ஆசிரியர்களே கலைத்திட்டத்தைச் செயற்படுத்தும் முகவர்களாக விளங்குகின்

தொடர்ச்சி பக்-02

## பல்கலைக்கழகக் கல்வியற்றுறைத் தலைவரின் மணிவிழாவில் வாழ்த்து



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியற்றுறைத் தலைவர் கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராசநாயகத்தின் மணிவிழா கடந்த 27.09.2020 ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். நீராவியடி இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கலாசாலை

தொடர்ச்சி பக்-02

## கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக்கான கல்விப் பணிப்பாளர் கலாசாலைக்கு வருகை



மத்திய கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக்கான கல்விப் பணிப்பாளர் ஆர்.எம்.எம். ரத்னாயக்காவும் உதவிப் பணிப்பாளர் நிசாந்தவும் கலாசாலையில் இடம்பெற்ற 2020 - 2021 கல்வியாண்டுக்கான ஆசிரிய பயிற்சி நெறிக்கு ஆட்

தொடர்ச்சி பக்-02

## 2017-2018 கல்வியாண்டு மாணவர்களின் இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்தன.

*2017-2018* கல்வியாண்டு மாணவர்களின் இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த *21.09.2020* இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியீடு செய்யப்பட்டுள்ளன. அன்றைய தினமே பரீட்சைத் திணைக்களத்தின் இணையவழியின் ஊடாக ஆசிரிய மாணவர்கள் தமக்கான பெறு

தொடர்ச்சி பக்-07

**கலாதீபம்...**

றார்கள். இலங்கையைப் பொறுத்தவரையில் தேசியரீதியில் கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகத்தினால் திட்டமிடப்படுகின்ற கலைத்திட்டத்தை பாடசாலைகளில் செயலுருப்பெற காரண மாகி உள்ளவர்கள் ஆசிரியர்களே.

எனவே இலங்கையில் நடைமுறைப்படுத் தப்படும் ஆசிரிய வாண்மைப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் ஆசிரிய கலாசாலைகளும் பெரும் பங்கு வகிக்கின்றன. கோப்பாய் ஆசிரிய கலா சாலையில் பயிற்சிபெறும் ஆசிரிய மாணவர் களின் எதிர்கால வளம்மிக்க தலைவர்களை உருவாக்குகின்ற உன்னதமான ஆசிரியப பணிக்கு நியமிக்கப்பட்டவர்களே.

அந்தவகையில் ஆசிரியர்களின் பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக ஆசிரிய வாண்மைப் பயிற்சியை வலு வானதாக அமைக்க முடிகிறது. இன்றைய கால கட்டத்தில் வேகமான வளர்ச்சி கண்டுவருகின்ற நவீன, தொழில்நுட்ப வசதிகளைக் கையாளும் ஆற்றல் படைத்தவர்களாகவும் தேடல்கள் வாயிலாகப் பல்வேறு ஆய்வுத் தகவல்களை சேகரித்து அதனைச் சமூகத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமென்ற நொக்கோடும் மாதவெளி யீடாகத் தவழ இருக்கும் கலாதீபம் சஞ்சிகைக்கு வாழ்த்துக் கூறுவதில் பெருமையடைகின்றேன்.

பல்வேறு நிலைகளிலும் வாண்மைத்து வம் மிக்க விரிவுரையாளர்களினால் ஆசிரிய மாணவர்களுக்கு மாதந்தோறும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்ற செயற்றிட்டத்தை ஊக்கு விக்கும் நோக்கில் இச்சஞ்சிகை வெளியிடப்படு கின்றது. இதற்கு முழுமனதோடு அர்ப்பணித்து செயல்வடிவத்தைப் பொறுப்பேற்று செயற் படுத்துகின்ற கலாசாலையின் பிரதி அதிபர் திரு.ச.லலீசன் மற்றும் சிரேஸ்ட விரிவுரையாளர் திரு.கணபதிப்பிள்ளை செந்தில்குமரன் ஆகி யோர் முன்வந்து பொறுப்பைக் கையேற்றுள் ளனர். இவர்களோடு அணிசெய்துணை ஆசிரி யர்களாகிய திரு வேல் நந்தகுமார், செல்வி.பத்ம நாதன் மாலதி, திருமதி. சிவசக்தி ஜெயராஜா ஆகியோரையும் வாழ்த்துவதோடு இதற்குப் பக்கபலமாக செயற்படுகின்ற ஏனைய விரிவுரை யாளர்களையும் பங்குபற்றுகின்ற ஆசிரிய மாண வர்களையும் குறிப்பாக இவ்விதழ் வடிவமைப் பில் பெரும் பங்காற்றியுள்ள தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கற்கை நெறியின் ஆசிரிய மாண வர்களையும் வாழ்த்துவதில் மகிழ்வடை கின்றேன்.

கலாசாலைச் சமூகம் ஆரம்பித்திருக்கின்ற இம்மாத இதழ் தொடர்ந்து வெளிவர வேண்டு மென எல்லாம் வல்ல நயினை நாகபூசனி அம்பாளின் இறையருளை வேண்டி வாழ்த்தி வணங்கி இம்மாத இதழ் வெளியீடானது இன்றைய ஆசிரியதின விழாவில் பிரதம அதிதி களாக கலந்துகொள்கின்ற திரு திருமதி V.S குணசீலன் தம்பதியினரின் கரங்களால் வெளியிட்டு வைக்கப்படுவதில் கலாசாலை சமூகம் பெருமை யடைகின்றது.

**திரு.வீ.கருணலிங்கம்,**
அதிபர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

**பல்கலைக் கழகக்...**

அதிபர், பிரதிஅதிபர், உபஅதிபர், உதவி அதிபர், விரிவுரையாளர்கள், ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆசிரிய மாணவர்கள் எனக் கோப்பாய் ஆசிரிய கலாசாலை சார்பில் பெரும் எண்ணிக்கையா னோர் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். அதிபர் வீ. கருணலிங்கம், பிரதி அதிபர் ச.லலீசன் ஆகியோர் உரையாற்றியதுடன் கலாசாலை மாணவர்கள் இறைவணக்கம் இசைத்தும் நிகழ் வைச் சிறப்பித்தனர்.

**கல்வி அமைச்சின்...**

களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட் சைகளை மேற்பார்வை செய்வதற்காகக் கடந்த 15.09.2020 கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு விஜயம் செய்தனர். இவர்கள் நேர்முகப் பரீட் சைச் சபையின் நடவடிக்கைகளை அவதானித்த துடன் கலாசாலையின் வகுப்பறைகளுக்கு நேரில் சென்று மாணவர்களது கருத்துக்களையும் அறிந்து கொண்டனர். கலாசாலை விரிவுரை யாளர்களுக்கான கூட்டத்தையும் நடத்தினர். இதன்போது விரிவுரையாளர்களது அபிப்பிராயங் களையும் கேட்டறிந்தனர். இதன்போது கருத்துத் தெரிவித்த விரிவுரையாளர்கள் வகுப்பறைகளில் அதிகளவு மாணவர்கள் பயில்வதால் எதிர்நோக் கப்படும் இடநெருக்கடி, கற்பித்தலில் ஏற்படும் சிரமங்கள் என்பன பற்றித் தெரிவித்ததோடு இலங்கைக் கல்வியாளர் சேவை விரிவுரையாளர் களுக்கான தொலைபேசிக் கொடுப்பனவில் தாம தங்கள் ஏற்படுவது குறித்தும் கருத்து வெளியிட் டனர். மேற்படி பிரச்சினைகளுக்கு உரிய நடவ டிக்கைகள் மேற்கொள்வதாகக் கல்விப் பணிப் பாளர் விரிவுரையாளர்களிடம் தெரிவித்தார்.

கலாதீபம்
කලාදීපම් KALADEEPAM

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின்
மாதாந்த மின்னிதழ்.
A monthly e magazine of Kopay Teachers' college.
කෝපායි ගුරු විද්‍යාලයීය
මාසික විද්‍යුත් සඟරාව

## நமது நோக்கு

### புதிய ஒளியாகக் கலாதீபம்

ஆக்கத்திறன் வெளிப்பாடும் ஆவணப் படுத்தும் மனப்பாங்கும் நம்மவர்களுக்கு அவசி யம் தேவைப்படும் பண்பாகவுள்ளது. மிக நீண்ட கல்விப்பாரம் பரியத்துக்கு உரித்து டைய ஆசிரிய கலாசாலைகள் கல்விச் செல் நெறியின் மாற்றங்களை உருவாக்கி புதிய பரிணாமத்தை எய்தும் நிலையில் உள்ளன. எமது கலாசாலையில் ஈராண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் மலராகக் 'கலைமலர்' வெளி வந்த வண்ணம் உள்ளது. மாறி வரும் உலகப் போருக்கு அமைவாக சஞ்சிகைகளின் மலர்ச்சி யிலும் புதிய செல் நெறியைக் காண்கிறோம்.

கைப்பேசியிலும், கணினியிலும் பார்த்து வாசிக்கக் கூடிய மின் இதழ்கள் இன்று பிரபலம் பெற்றுத்திகழ்கின்றன. எமது சூழலில் மலரும் பல நாளிதழ்களை வாசகர்கள் இந்த வடிவத்தில் பெற்றுப் பயனடைகின்றனர். கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர்களி னதும் விரிவுரையாளர் களினதும் ஆக்கத் திறனை மேம்படுத்துவதற்காகவும் கலா சாலைச் செயற்பாடுகளைப் பிறரறியச் செய்வ தற்காகவும் 'கலாதீபம்' இன்று முதல் மாதம் ஒருமுறை ஒளிவீச இருக்கின்றது.

இத்தகைய வெளியீட்டுக்கு அனுமதி தந்த கலாசாலையின் அதிபருக்கும் ஊக்கம் நல்கும் விரிவுரையாளர் குழுமத்திற்கும் எமது நன்றிகள். கலாசாலை சார்ந்து ஒளி வீசுவ தனால் ''கலாதீபம்'' என்ற பெயரும் பொருத் தமுடையதாக அமைகிறது. இலங்கையில் தற்போது செயற்படும் எட்டு ஆசிரிய கலாசாலை களுள் முதன்மை நிலையைப் பேணிவரு கின்ற கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் புதிய முயற்சி இது. கலாதீபம் தொடர்ந்து ஒளிவீசக் கல்விசார் ஆழ்வலர்கள் கைகொடுத்து உதவுவர் என எதிர்பார்க்கின்றோம்.

''புதியதோர் உலகம் செய்வோம்''

## கலாதீபம் குழுமம்

**கலாதீபம் குழு**

**நெறிப்படுத்தல்**

திரு. வீரகத்தி கருணலிங்கம்
(அதிபர்)

**வள ஆலோசனை**

திரு. தங்கராசா கோபாலகிருஷ்ணன்
(உப அதிபர்)
திருமதி சிவசக்தி இராதாகிருஷ்ணன்
(துணை அதிபர்)

**பிரதம ஆசிரியர்**

திரு. சந்திரமௌலீசன் லலீசன்
(பிரதி அதிபர்)

**ஆசிரியர் குழு**

திரு. கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
(சிரேஷ்ட விரிவுரையாளர்)
செல்வி. மாலதி பத்மநாதன்
(விரிவுரையாளர்)
திரு. வேலும்மயிலும் நந்தகுமார்
(விரிவுரையாளர்)
திருமதி சிவசக்தி ஜெயராஜா
(விரிவுரையாளர்)
திரு இராமலிங்கம் இளங்கீரன்
(ஆசிரிய மாணவர் – ஆரம்பக்கல்வி)
செல்வி நிவேதா சத்தியசீலன்
(ஆசிரிய மாணவி — த.தொ.தொழினுட்பம்)

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையரா வர். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக் கள் கலாசாலையின் கருத்துக்களாகக் கொள் ளப்படமாட்டா.

**வெளியீடு**

கோப்பாய் ஆசிரிய கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி : 0212230323

# ஆசிரியத்துவமும் வாசிப்பும் சில சிந்தனைகள்



எமது கலாசாலை வெளியிடுகின்ற கலாதீபம் என்ற இம் மின்னிதழுக்காக ஆசிரியத்துவமும் வாசிப்பும் என்ற விடயம் பற்றி காலப்பொருத்தம் கருதி சில விடயங்களைச் சிந்திக்கலாம் என எண்ணுகிறேன். ஒக்டோபர் மாதம் என்பது பல முக்கியமான தினங்களின் மாதமாக அமை கிறது. அவ்வகையில் எம்மைப் பொறுத்தவரை அம் மாதத்தில் வரும் ஆசிரிய தினம் மற்றும் அந்த மாதம் முழுவதுமாக அமையும் வாசிப்பு மாதம் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. மானுடத்தில் இருந்து பிரிக்க முடியாதது சுவாசித்தல் என்றால் ஆசிரியத்திடம் இருந்து தவிர்க்கக் கூடாதது வாசிப்பு. மொழித்திறன் விருத்தியில் அடிப்படை மொழித்திறன்களில் ஒன்றாக விளங்கி வாசிப்பு முக்கியத்துவம் பெறுகிறது. வாசித்தல் என்பது மன ஒருமைப்பாட்டுடன் கண்கள் வழியாக ஒரு படைப்பாளியின் எண்ணங்களையும் உணர்வுகளையும் எழுத்துக்கள் என்ற கருவி யூடாக இனங்காணுதல், அறிதல், விளங்கிக்கொள்ளல் சிந்தனைக்குரியதாக்கி நினைவில் இருத்தல் என்ற செயற்பாடுகளின் தொகுப்பாகும். காலம் தோறும் வாசிப்பு பற்றிய சிந்தனைகளிலும் மாற்றங்களை அவதானிக்க முடிகிறது. ஒரு காலத்தில் புத்தக வாசிப்பே வாசிப்பு என்ற நிலைமாறி இன்று மின்னியல் செல்வாக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சி என்பவற்றால் மின்னியல் கற்றல் (E-Learning) என்பது வளர்ச்சியடைந்து விட்டது. இன்றைய மின்னியல் சார் சமூகத்தில் மின்னியல்சார் கணினி எழுத்தறிவு என்பது அவசியமாகிவிட்ட சூழலில் வாசிப்பின் அர்த்தங் களும் மாறிவிட்டதைக் காணமுடிகிறது. இன்றைய நவீன வாசிப்பில் கணினித் திரைகளை

**வேல்நந்தகுமார், விரிவுரையாளர்,**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை**

**தொடர்ச்சி பக்-05**

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இருந்து பயிற்சி முடித்து வெளியேறிய 137 ஆசிரியர்கள் பாடசாலைகளில் இணைவு

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 2018 - 2019 கல்வியாண்டிற்கான ஈராண்டு பயிற்சியைப் பூர்த்திசெய்த 137 ஆசிரியர்கள் மீளவும் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த 18 ஆம் திகதி பயிற்சியை முடித்து கலாசாலையில் இருந்து வெளியேறினர். கடந்த 21.09.2020 திங்கட்கிழமை தொடக்கம் பாடசாலைகளில் சேவையாற்ற இணைந்துள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிக்காலம் கடந்த 09.09.2020 உடன் நிறைவுறுவதாக இருந்த போதிலும் கொவிட் 19 பேரிடர் அச்சுறுத்தல் காரணமாகக் கல்வி நடவடிக்கைகள் தாமதமடைந்தமையால் இசுருபாய கல்வி அமைச்சுச் செயலாளரால் கற்கைநெறி இருவாரங்கள் கால நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. கலாசாலையின் உள்ளகப் பரீட்சையை நிறைவு செய்த இவர்களுக்காகப் பரீட்சைத் திணைக்களம் நடத்தும் வெளிவாரிப் பரீட்சைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## பலாலி ஆசிரிய கலாசாலை இயங்கிய இறுதித் தற்காலிகக் கட்டடம் கையளிப்பு

2012 ஆம் ஆண்டு தொடக்கம் பலாலி ஆசிரிய கலாசாலையின் நடவடிக்கைகள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையுடன் இணைக்கப்பட்டமையைத் தொடர்ந்து பலாலி ஆசிரிய கலாசாலை தற்காலிகமாக இயங்கிய யாழ். திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தின் கட்டடம் உத்தியோக பூர்வமாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சிடம் கையளிக்கப்பட்டது. நீண்ட கால காத்திருப்புக்குப் பின்னர் புதிய ஆசிரிய கல்விப் பணிப்பாளர் மேற்கொண்ட அனுமதியின் பிரகாரம் கடந்த 10.09.2020 உத்தியோகபூர்வமாக வடக்கு மகாணக் கல்வித் திணைக்களக் கணக்காளர் எம்.ஜெயக்குமாரிடம் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலாசாலை சார்பில் அதிபர் வீ.கருணலிங்கம், உபஅதிபர் த.கோபாலகிருஸ்ணன், முகாமைத்துவ உதவியாளர் நிசாந்தி பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கலாசாலைச் சமூகத்தவரின் இணையவழிக் கருத்தரங்கு

கலாசாலைச் சமூகத்தவர் நடத்தும் இணையவழிக் கருத்தரங்கு (வெபினார்) பிரதி புதன்கிழமை தோறும் இரவு 7.30 மணி தொடக்கம் 8.30 மணிவரை நடைபெற்று வருகின்றது. கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் வி.எஸ்.குணசீலன் அவர்களது ஏற்பாட்டில் புதிய விஞ்ஞானக் கல்வி நிறுவன இயக்குநர் இ.அருட்செல்வம் (அருள்) அவர்களது 500 பேர் இணையக் கூடிய சூம் செயலி வாயிலாக இந்த வெபினார் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கலாசாலை அதிபர் தலைமையில் இதுவரை ஏழு வெபினார்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பிரதி அதிபர் இந்த வெபினாரின் நெறிப்படுத்துனராகச் செயற்படுகின்றார். 03.08.2020 அன்று முதலாவது நிகழ்வு இடம்பெற்றது. தமிழகப் பேச்சாளர் இலக்கியச் சுடர் த.இராமலிங்கம் ஆசிரியத்துவம் என்ற பொருளிலும் அமெரிக்கப் பௌதிகவியல் பேராசிரியர் நா. சிவயோகன் ஆசிரியரும் இணையவழிக் கற்பித்தலும் என்ற பொருளிலும் விரிவுரையாளர் பொ.சற்குணநாதன் அளவீடும் மதிப்பீடும் தொடர்பாகவும் விரிவுரையாற்றினர்.

02 ஆவது வெபினார் 12.08.2020 அன்று இடம்பெற்றது. இதில் இசுருபாய கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக்கான பிரதம ஆணையாளர் எக்கனாயக்கா, கல்விப் பணிப்பாளர் ஆர்.எம்.எம். ரத்னாயக்கா ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரைகளை வழங்கினர். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சு.பரமானந்தம்

தொடர்ச்சி பக்-06

## சுருக்கெழுத்து வழிகாட்டல் நூல் வெளியீடு



கலாசாலையின்2018 - 2019 கல்வியாண்டில் வணிகக் கற்கை நெறியில் பயிற்சி பெற்ற இரத்தினபுரியைச் சேர்ந்த ஆசிரிய மாணவன் ந.பரமநாதன் சுருக்கெழுத்து வழிகாட்டல் என்ற நூலை 09.09.2020 வெளியீடு செய்தார். கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை பிரதி அதிபர் ச.லலீசன் மேற்கொண்டார். வணிகத் துறை விரிவுரையாளர்களான சத்தியா ரஞ்சித், மாலதி பத்மநாதன், நாகரத்தினம் வேலுப்பிள்ளை ஆகியோர் முன்னிலையில் நூலை அதிபர் வெளியிட்டுவைக்க அதன் முதற்பிரதியை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதியும் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளருமாகிய செல்வமலர் செல்வராஜா பெற்றுக்கொண்டார்.

### ஆசிரியத்துவமும்...

வாசித்தல், தொலைக்காட்சிகளை வாசித்தல், கைபேசிகள் வழி சமூக வலைத்தளங்களை வாசித்தல், மின்னிதழ்களை வாசித்தல் என வாசிப்பில் பல தள மாற்றங்கள் ஏற்பட்டாலும் இன்றும்கூட புத்தகங்களை, பத்திரிகைகளை அச்சுப்பிரதிகளில் வாசிப்பில் உள்ள அனுபவமே சிறந்தது என்ற கருத்தும் இல்லாமல் இல்லை. அறிவை இற்றைப்படுத்த வேண்டியவர்கள் ஆசிரியர்கள் காலம் முழுவதும் கற்றுக்கொண்டிருக்க வேண்டியவர்கள் ஆசிரியர்கள் என்ற வகையில் அவர்கள் தமது பாடரீதியான அறிவை மேம்படுத்திக் கொள்ளவும் பாடத்துக்குப் புறம்பான அறிவை மேம்படுத்திக் கொள்ளவும் அவர்களுக்கு வாசிப்பு அவசியமாகிறது. ஒரு வகுப்பறை என்ற நிலையில் மௌன வாசிப்பு, உரத்து வாசிப்பு என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. எனவே மிகச் சிறந்தொரு பழைமையான கிருஸ்ணை படிப்பகத்தை கொண்டுள்ள நாம் அந் நூலகத்தை சிறந்த முறையில் பயன்படுத்தியும் வேறு வழிகளிலும் எமது வாசிப்பை மேம்படுத்துவோம்.

ஆய்வுத்தேடல் உள்ள ஆசிரியத்துவமே எதிர்கால வாண்மைத்துவம் மிக்க ஆசிரியத்துவம் என்ற வகையில் நீங்கள் வாசிக்கவேண்டிய சில சஞ்சிகைகள் என்ற வகையில் அகவிழி, ஆசிரியம், கடல், கல்வியியலாளன் போன்றன முக்கியத்துவம் பெறுகின்றன என்று கூறி கலாசாலையின் இம் மின்னிதழ் முயற்சிக்கு வாழ்த்துக்கூறி எனது கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

## முக்கிய செய்தியா முக்கியச் செய்தியா

முக்கிய செய்தி - முக்கியச் செய்தி இரண்டு விதத்திலான பயன்பாடுகளும் நம்ம வரிடையே காணப்படுகின்றன. தமிழ்ப் புணர்ச்சி விதிகளின் பிரகாரம் இது முக்கியச் செய்தி தான். ஆயினும் வடமொழிச் சொற்களை புணர்த் தும்போது சந்திப் புணர்ச்சி கருத்தில் கொள் ளப்படுவதில்லை.

இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக வள்ளுவரின் முதற்குறளைக் கொள்ளலாம். அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு என்றுதான் குறள் அமைந் துள்ளது. ஆதிப் பகவன் என்று வள்ளுவர் எழுதவில்லை. ஆதி என்பது வடசொல் ஆகும்.

இதே போல முக்கியச்செய்தி என்று எழுதவேண்டிய தேவை இல்லை. முக்கிய செய்தி என்பதே சரியானது. இதேபோல் ஆசி ரியக் கலாசாலை அல்ல. ஆசிரிய கலாசாலை என்பதே சரியானது. ஆசிரியர் என்ற சொல் வடசொல் ஆகும். - சலன் -

## பேராசிரியர் விரிவுரையாளர் ஆனார்.

பேராசிரியரும் பெருமைசேர் அதிபரும் ஆராதனை செய்து அணைத்திடும் அன் னையே! என்பது பலாலி ஆசிரிய கலாசாலைக் கீதத்தில் வரும் ஓரடி.

ஆசிரிய கலாசாலையில் பாடம் சொல் லிக் கொடுத்தவர்களை பேராசிரியர் என்று அழைக்கும் வழக்கமே காலங்காலமாக இரு ந்து வந்தது. புரொபசர் என்பதற்கு இணை யான ஒரு சொல் தேவைப்பட்டமையால் காலப் போக்கில் இந்தச்சொல் அவர்களுக்கு ஆயிற்று.

தமிழகத்தில் கல்லூரிகளில் கற்பிக்கின்ற யாவரும் பேராசிரியர் என்ற சொல்லாலேயே அழைக்கப்படுகின்றனர். 1974 இல் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் தொடக்கத்துடன் கலாசாலைகளில் கற்பிப்போரும் விரிவுரையா ளர்கள் என்றே அழைக்கப்படலாயினர்.

1985 இல் இலங்கை ஆசிரிய கல்வி யாளர் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அந்தச் சேவை வகுதிக்குள் வருகின்றவர்களையும் விரிவுரையாளர் என்றே அழைக்கின்றனர். இருப்பினும் அவர்களை ஆசிரிய கல்வியாளர் என்ற கலைச் சொல்லால் அழைக்கவேண்டும் என்ற கருத்து இன்று வலுவுற்று வருகின்றது. - சலன் -

### கலாசாலைச் சமூகத்தவரின்...

ஆசிரியரும் நிகழ்நிலைக் கற்றலும் என்ற பொரு ளிலும் கலாசாலை விரிவுரையாளர் சு.பாலச் சந்திரமூர்த்தி கல்வியியல் பாடம் தொடர்பாகவும் விரிவுரைகளை ஆற்றினர்.

26.08.2020 நடைபெற்ற 03 ஆவது வெபி னாரின் நெறிப்படுத்துனராக விரிவுரையாளர் பா. பாஸ்கரன் செயற்பட்டார். ஆசிரியம் சஞ்சிகை ஆசிரியர் தெ.மதுசுதனன், விரிவுரையாளர் வே.சேந் தன் ஆகியோர் வளவாளர்களாக விரிவுரைகளை ஆற்றினர். 02.09..2020 நடைபெற்ற 04 ஆவது வெபினாரில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு செயலர் எல்.இளங்கோவன் வாழ்த்துரை வழங் கினார். கொட்டகலை ஆசிரிய கலாசாலை அதி பர் திருமதி சந்திரலேகா கிங்ஸ்லி, விரிவுரையா ளர் சு.பிரசாந்தன் ஆகியோர் உளவியல் பாடம் தொடர்பாக விரிவுரைகளை ஆற்றனர்.

09.09.2020 நடைபெற்ற 05 ஆவது வெபி னாரில் மத்திய கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.ஜி.ஐ.கெலனி ஹேமாலி வாழ்த்துரை வழங்கி னார். கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் 2022 இல் ஏற்படுத்தப்படவுள்ள புதிய கலைத் திட்ட மாற்றங்களும் ஆசிரியர்களும் என்ற பொருளில் டாக்டர் உபாலி சேதரவின் கருத்துக் களைத் தழுவியதாக கருத்துரை ஆற்றினார். 16.09.2020 நடைபெற்ற 06 ஆவது வெபினாரில் மத்திய கல்வி அமைச்சின் பௌதிகவள மேம் பாட்டுச் செயற்றிட்டத்திற்கான பணிப்பாளர் காரை கந்தையா பத்மானந்தன் கலந்துகொண்டு வாழ்த் துரை வழங்கினார். கலாசாலை விரிவுரையாளர் கு.பாலசண்முகன் தமிழும் தொடர்பாடல் திறன் களும் என்ற பொருளில் விரிவுரையாற்றினார்.

23.09.2020 நடைபெற்ற 07 ஆவது வெபி னாரில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல் லூரி உபபீடாதிபதி செல்வமலர் செல்வராஜா வாழ்த்துரை வழங்கினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்றுறை விரிவுரையா ளர் இ.சர்வேஸ்வரா ஆசிரியரும் உயர்கல்வியும் என்ற பொருளில் கருத்துரை வழங்கினார்.

வெபினாரில் கலாசாலை மாணவர்கள் 200 இற்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் பங் கேற்று வருகின்றனர். இவர்களுள் பெரும் பான்மையானோர் தமது கைப்பேசிகளைப் பயன் படுத்தியே இணைந்து கற்கின்றனர்.

# புதிய மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம்



கல்வியாண்டு 2019-2020 இற்கான மாணவர்மன்ற மாணவ தலைவர்களுக்கான சின்னம் சுட்டும் வைபவம் கடந்த 21.09.2020 திங்கட்கிழமை காலை கலாசாலையின் ஜெகன்மோகினி மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் 30 ஆசிரிய மாணவர்கள் மாணவ தலைவர்களாக அதிபர் மற்றும் விரிவுரையாளர்கள் முன்னிலையில்மாணவ தலைவர்களாகச் சின்னம் சூடிச் சத்தியப் பிரமாணம் மேற்கொண்டனர். சிரேஸ்ட மாணவ தலைவர் ஆண்: தி.திலீபன் (கணிதம்) பெண் : தர்சினி சிவஞானம் (ஆரம்பக் கல்வி-5), உதவி சிரேட்ட மாணவ தலைவர்: சி.சிவனேசன் (ஆரம்பக் கல்வி-1) பெண் : விஜயரட்ணம் கரோலின் (உடற்கல்வி) செயலாளர், கே.அருணகிரிநாதன் (ஆரம்பக்கல்வி 2) பொருளாளர்: பாலசுந்தரம் சுவர்ணகுமார் (வணிகம்) ஏனைய மாணவ தலைவர்கள்: சுவர்ணலதா விஜயகுமார் (ஆ.க.1), எம்.விஜிதா (ஆ.க.1), செல்மினி செல்வராஜா (ஆ.க.2), அமலரோஸ் சுமன் (ஆக.2), கணபதிஅம்மா பெருமாள் (ஆக.3) பாத்திமா ரமீஸ் (ஆ.க.3), இ.இளங்கீரன் (ஆக.3), க.துஸ்யந்தி (ஆ.க. 4), சுபாசினி தயாளன் (ஆக.4), த.பத்மப்பிரியா (ஆக.4), அ.அன்ரன் நிமல்ராஜ் (ஆ.க.5), நிருசா பத்மநாதன் (ஆ.க.05), ஆசீர் வாதம் பொலின்ராசா(ஆ.க.06), ஜெயமேரி திருவருட்செல்வம் (ஆ.க.06), ஜொய்சி துரம் பெர்ணாந்து (ஆ.க.06), ச.யோண்சன் (ஆங்கிலம்) த.ராதிகா (ஆங்கிலம்) ச.நிவேதிகா (தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்), ச.மஜீபன் (மனைப்பொருளியல்) நி.பாபுதரன் (இந்து சமயம்) மு.நகுலேஸ்வரன் (உடற்கல்வி) க.சூரியகாந் (தமிழ்), கனகரத்தினம் கண்ணகி (தமிழ்), பா.மயூரதா (விசேடகல்வி) என முப்பது ஆசிரிய மாணவர்கள் சின்னங்களைச் சூடிக்கொண்டனர். சின்னம் சுட்டும் வைபவம் இடம்பெற்றமையை சிறப்பிக்கும் முகமாக மாணவ தலைவர் அணிக்கும் கலாசாலை விரிவுரையாளர் அணிக்கும் 10 பந்து பரிமாற்றத்தைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியும், கரப்பந்தாட்டப் போட்டியும் நடைபெற்றன. இரண்டு போட்டிகளிலும் விரிவுரையாளர் அணி வெற்றியை ஈட்டிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## 2017 - 2018 கல்வியாண்டு...

பேறுகளைப் பார்க்கக் கூடிய வசதியைப் பரீட்சைத் திணைக்களம் மேற்கொண்டிருந்தது. ஆசிரிய கலாசாலைப் பரீட்சை வரலாற்றில் இணைய வழியில் பரீட்சைப் பெறுபேறு வெளியிடப்பட்ட முதலாவது தடவை இது என்பதுவும் குறிப்பிடத்தக்கது. கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இருந்து 227 பேர் பரீட்சைக்குத் தோற்றி 226 பேர் சித்தியடைந்துள்ளனர். ஒருவர் கல்வி அளவீடும் மதிப்பீடும் பாடத்தில் நூனசித்தி அடைந்துள்ளார். மாணவர்களில் அநேகர் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். கணிதத் துறையில் நடேசன் தர்சன் 13 ஏ 01 பி, வணிகத் துறையில் யசோரா 13 ஏ 01 பி, ஆரம்பக் கல்வித்துறையில் சுப்பிரமணியம் கலைவாணி 12 ஏ 01 சி, இறுதிப் பரீட்சை பெறுபேறு தொடர்பான பகுப்பாய்வு மற்றும் மேலதிக விபரங்களை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.

## ஆரம்பக்கல்வி மாணவர்களின் ஆற்றுகைச் செயற்பாடு

தமது கற்றல் கற்பித்தல் நடவடிக்கை சார்ந்த அனுபவங்களின் வெளிப்பாடாக ஆரம்பக் கல்வி மாணவர்கள் ஆற்றுகைச் செயற்பாட்டில் ஈடுபட்டு தமது ஆக்கத்திறனை வெளிப்படுத்தி வருகின்றனர். ஆரம்பக் கல்வி மன்றத்தினர் இச் செயற்பாடுகளை வழிப்படுத்தி வருகின்றனர். ஆரம்பக் கல்வியில் உள்ள 6 வகுப்புகளில் இரண்டாவது வகுப்பு சார்ந்த மாணவர்களின் ஆற்றுகைச் செயற்பாட்டு நிகழ்வே கடந்த 24.09.2020 வியாழக்கிழமை மாலை கலாசாலையின் ஜெகன் மோகினி மண்டபத்தில் நடைபெற்றது. ஆரம்பக் கல்வி 02 வகுப்புப் பொறுப்பு விரிவுரையாளர் திருமதி சிவசக்தி ஜெயராஜா நிகழ்வுகளை நெறிப்படுத்தியிருந்தார்.

# பிரதி அதிபரின் அகவை ஐம்பதையொட்டி மதிப்பளிப்பு





கலாசாலையின் பிரதிஅதிபர் ச.லலீசனின் அகவை ஐம்பது 19.09.2020 இல் அமைந்தமையையொட்டி 18.09.2020 கலாசாலையின் விரிவுரையாளர் கழகம் மதிப்பளிப்பு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிறந்ததின கேக் வெட்டப்பட்டதுடன் விரிவுரையாளர்கள் பலர் வாழ்த்துக்களைத் தெரிவித்து உரையாற்றினர்.

# பிரிவுபசார நிகழ்வின் போது...



கலாசாலையில் சிரேஷ்ட விரிவுரையாளராக பணியாற்றி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் உபபீடாதிபதியாக பதவி உயர்வு பெற்று சென்ற செல்வி செல்வமலர் செல்வராஜா மற்றும் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலைக்கு கல்வியாளர் சேவை விரிவுரையாளராகச் சென்ற க.சயந்தன் ஆகியோருக்கான பிரிவு பசார நிகழ்வு 17.08.2020 இல் இடம்பெற்றது.

## விரிவுரையாளர்களுக்கும் ஆசிரிய மாணவர்களுக்கும் இடையிலான சிநேகபூர்வ கரப்பந்தாட்ட நிறைவில்



# கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டின்போது



இலங்கை கல்வியியலாளர் சேவையில்2018ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட விரிவுரையாளர் அணியின் ஆங்கில விரிவுரையாளரான செல்வி சுஜீவா அருள்லிங்கம் அவர்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பதவியேற்ற இரண்டாம் வருட நிறைவுநாளை முன்னிட்டு தனது ஆசிரிய மாணவர்களின் மூலம் ஆங்கிலக் கவிதைத் தொகுப்பொன்றை 23.07.2020 இல் வெளியிட்டார்.

# மரநடுகை நிகழ்வின்போது...





கலாசாலையின் மைதானத்தைச் சூழ நிழல் மரங்கள் நாட்டும் நிகழ்வு கடந்த 21.09.2020 திங்கட்கிழமை நடைபெற்றது. அமெரிக்காவின் ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்தவரும் இருபாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய தொண்டுநாதன் சுவாமி, தேசிய கல்வியற் கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி பா.தனபாலன் சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் இயற்கை நேசன் யுகேஸ் ஆகியோரது ஆதரவுடன் இந்நிகழ்வு இடம்பெற்றது. கலாசாலையில் உள்ள கற்கை நெறிகளின் வகுப்பு மாணவ தலைவர்கள் மரங்களை நாட்டினர்.

இப்பத்திரிகை கோப்பாய் ஆசிரிய கலாசாலையால் 05.10.2020 அன்று மின்னிதழாக வெளியீடு செய்யப்பட்டது.